உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



# ஈராண்டில் இருமாதத்துக்கு ஒரு திருமுறை

## பன்னிரு திருமுறை வழிபாட்டுக் கருத்தரங்கு

*(2014 டிசம்பர் முதல் 2018 ஆகஸ்டு வரை)*

**கற்பகம் பல்கலைக்கழகம் - பன்னிரு திருமுறை ஆய்வுமையம் - கோவை**



*அந்தண்பூங் கச்சி யேகம்பனை யம்மானைக்*
*கந்தண்பூங் காழியூரன் கலிக் கோவையால்*
*சந்தமே பாடவல்ல தமிழ் ஞானசம்*
*பந்தன்சொற் பாடியாடக் கெடும் பாவமே – திருஞானசம்பந்தர்*

அன்புடையீர் வணக்கம்,

நாமெல்லாம் உய்வதற்காகச் சிவபெருமான் நால்வர் பெருமக்கள் வழிதிருமுறைகளை வாரி வழங்கியுள்ளார். அதை உணர்ந்த ஒவ்வொரு மானுட உயிரும் ஒவ்வொரு வழியாகத் தனக்கு இறைவன் உணர்த்திய அளவில் துய்த்துக்கொண்டும் – வினைகளைக் கழித்துக்கொண்டும் நல்லூர்ப் பெருமண நன்னாளை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டும் உள்ளது. நீறுபூசிய நெற்றியுடன், கண்டிகை அணிந்த கழுத்துடன், திருஐந்தெழுத்தை உச்சரிக்கும் நாவுடன் ஆனந்தமான சைவக்காற்றைச் சுவாசிக்க நாம் பல பிறவிகளில் புண்ணியம் செய்திருக்கவேண்டும். அந்தப் பதிப் புண்ணியக் கணக்கைக் கூட்டிக்கொண்டு, பாவக்கணக்கைக் கழித்துக்கொண்டு இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் நிகழ்வுக்காகத் திருமுறைகளை இன்னும் வலுவாகப் போற்ற வேண்டுமெனத் திருவருள் தூண்ட, நாம் பல காலம் பல அரங்குகளில் ஆய்ந்த பன்னிரு திருமுறைகளையும் மீண்டும் அழகாக வரிசை நிரலில் ஆராயத் தீர்மானித்து, வருகிற 2014 டிசம்பர் முதலாக, 2018 ஆகஸ்டு வரையிலான இரண்டு ஆண்டுகளின் 12 அமர்வுகளிலும் இரண்டு திங்களுக்கு ஒரு திருமுறை எனக் கீழ்க்காண் நிகழ்ச்சி நிரல்படி நடைபெறும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27, 28 | டிசம்பர் 2014 | முதல் திருமுறை | ஏப்ரல் 2016 | எட்டாம் திருமுறை (II)<br>ஒன்பதாம் திருமுறை | ஆகஸ்டு 2017 | பன்னிரெண்டாம் திருமுறை (I) |
| 21, 22 | பிப்ரவரி 2015 | இரண்டாம் திருமுறை | ஜுன் 2016 | பத்தாம் திருமுறை (I) | அக்டோபர் 2017 | பன்னிரெண்டாம் திருமுறை (II) |
| 18, 19 | ஏப்ரல் 2015 | மூன்றாம் திருமுறை | ஆகஸ்டு 2016 | பத்தாம் திருமுறை (II) | டிசம்பர் 2017 | பன்னிரெண்டாம் திருமுறை (III) |
| 27, 28 | ஜுன் 2015 | நான்காம் திருமுறை | அக்டோபர் 2016 | பத்தாம் திருமுறை (III) | பிப்ரவரி 2018 | பன்னிரெண்டாம் திருமுறை (IV) |
| 29, 30 | ஆகஸ்டு 2015 | ஐந்தாம் திருமுறை | டிசம்பர் 2016 | பதினொன்றாம் திருமுறை (I) | ஏப்ரல் 2018 | பன்னிரெண்டாம் திருமுறை (V) |
| 24, 25 | அக்டோபர் 2015 | ஆறாம் திருமுறை | பிப்ரவரி 2017 | பதினொன்றாம் திருமுறை (II) | ஜுன் 2018 | பன்னிரெண்டாம் திருமுறை (VI) |
| 26, 27 | டிசம்பர் 2015 | ஏழாம் திருமுறை | ஏப்ரல் 2017 | பதினொன்றாம் திருமுறை (III) | ஆகஸ்டு 2018 | பன்னிரெண்டாம் திருமுறை (VII) |
| 27, 28 | பிப்ரவரி 2016 | எட்டாம் திருமுறை (I) | ஜுன் 2017 | பதினொன்றாம் திருமுறை (IV) | | |

ஒவ்வொரு திருமுறையும் வழக்கம்போல் 8 அமர்வுகளாகப் பிரித்து 6 அமர்வுகள் (முதல் நாள் 3 + இரண்டாம் நாள் 3) இயற் சொற்பொழிவுகளாக நடைபெறும். நான்கு, எட்டாவது அமர்வுகள் பக்க வாத்தியங்களுடன் பண்ணிசையாகவும் நடைபெறும். ஒவ்வொரு திருமுறை விழாவுக்கும் இரு மாதங்களுக்கு ஒரு முறை தனி அழைப்பிதழ் 2 ஆண்டுகளுக்கு வராது. இதையே தாங்கள் **மூன்றாண்டு** அழைப்பிதழாகப் போற்றவும்.

அனைவரும் வருக.. சிவனருள் பெறுக..

நன்றி,



அன்பன்,
**டாக்டர் இராச.வசந்தகுமார்**
வேந்தர், கற்பகம் பல்கலைக்கழகம்.

*... திருச்சிற்றம்பலம் ...*